இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in   murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 178 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 25 – வெள்ளிக்கிழமை 07 பிப்ரவரி 2025 – கோவை ★ ★ 16 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 178 : Thiruvalluvar Year - 2056 - Thai 25 - Friday 07 February 2025 - Kovai ★★ 16+12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.2.2025) வன்னியர் கூட்டமைப்பின் தலைவர் சி.என்.ராமமூர்த்தி சந்தித்து, தங்களது நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 21 சமூக நீதி போராளிகளுக்கு மணி மண்டபம் அமைத்து கொடுத்தமைக்காக தனது நன்றியினை தெரிவித்துக்கொண்டார். இச்சந்திப்பின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், வன்னியர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் வெங்கடேசன் மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.2.2025) பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னணி தலைவர் மறைந்த காடுவெட்டி குருவின் மகள் திருமதி. குரு. விருதாம்பிகை மற்றும் மருமகன் காடுவெட்டி மனோஜ் ஆகியோர் சந்தித்து, விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 21 சமூக நீதி போராளிகளுக்கு மணி மண்டபம் அமைத்து கொடுத்தமைக்காக, தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

### முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கிறார்! - 2வது நாளாக

# நெல்லை மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!

## பல நலத்திட்ட உதவிகளை வழங்கி - புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்!

**திருநெல்வேலி, பிப். 7-**

**திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்று பிப்ரவரி 6 மற்றும் 7ஆம் தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டு ரூ.6.18 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கவுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டந்தோறும் கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இந்த ஆய்வு பயணத்தின்போது முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.



அந்த வகையில் 6 மற்றும் 7ம் தேதிகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் கள ஆய்வு பயணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்ளப் போவதாக உங்களில் ஒருவன் கடிதத்தில் அறிவித்திருந்தார்.

இதையொட்டி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகேயுள்ள மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில், சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் ரூ.78 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ வளாகத்தை முதல்வர் அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து கங்கைகொண்டான் சிப்காட்டில் சோலார் தொழிற்சாலையை திறந்து வைக்கிறார். பாளையங்கோட்டையில் மார்க்கெட் உள்ளிட்ட முடிவுற்ற திட்டப்பணிகளையும் தொடங்கி வைக்கிறார். மேலும் விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்குகிறார்.

முதல்வர் அவர்கள் நேற்று (6ம் தேதி) திருநெல்வேலி மாவட்டத்துக்கு வருகை தந்தார்.

திருநெல்வேலியில் கங்கைகொண்டான் சிப்காட்டில் சோலார் பவர் நிறுவனத்தை தொடங்கி வைத்துவிட்டு, உணவு பதப்படுத்தும் கூடத்தை திறந்து வைத்தார். மாலையில் கழக நிர்வாகிகளைச் சந்தித்து கள ஆய்வு மேற்கொண்டார்.

அத்துடன் பாளையங்கோட்டையில் கட்டப்பட்டுள்ள மார்க்கெட்டை திறந்து வைத்தார்.

இன்று (7ம் தேதி) காலையில் வெள்ளாங்குழியில் வெள்ளநீர் கால்வாய் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். அங்கு விவசாயிகளை சந்தித்து பேசிவிட்டு, பாளையங்கோட்டையில் விழா நடைபெறும் மைதானத்தில் 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். மொத்தமாக 2 நாட்களிலும் மாவட்டத்தில் ரூ.6.18 ஆயிரம் கோடி மதிப்பில் திட்டங்களை முதல்வர் தொடங்கி வைக்கிறார்.

**முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 6, 7 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த முதல்வர் அவர்களை நேற்று (6ம் தேதி) பாளை கே.டி.சி.நகர் ரவுண்டானாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

இந்நிகழ்வு தொடர்பாக அமைச்சர் கே.என்.நேரு, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை மாநகர காவல்துறை ஆணையர் சந்தோஷ் ஹாதிமணி, நெல்லை சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் பா.மூர்த்தி, மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரவணன் மற்றும் அரசு அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

நிகழ்வில் மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் சு.சுப்ரமணியன் மற்றும் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், முன்னாள் மேயர் சரவணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாயத் தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன், சுரேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன், பகுதிச் செயலாளர் அண்டன் செல்லதுரை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் - ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம்

# பழைய ஓய்வூதியத் திட்டம் குறித்து ஆராய்ந்திட குழு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, பிப். 7 -

தமிழ்நாடு அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: -

கடந்த 01.04.2003 - முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதே வேளையில் ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு தேசிய ஓய்வூதியத் திட்டம் (National Pension System) 01.01.2004 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு தொடர்ந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமே தொடர அனுமதிக்கப்பட்டது.

எனினும் மாநில அரசுப்பணியாளர்கள் 01.04.2003க்கு முன்பிருந்த திட்டத்தை செயல்படுத்திட வேண்டி தொடர்ந்து கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். இந்நிலையில், 24.1.2025 அன்று ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது,

எனவே, பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. மாநில அரசின் நிதி நிலையினையும், பணியாளர்களின் ஓய்வூதியக் கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு நடைமுறைப் படுத்தத் தக்க உரிய ஓய்வூதிய முறை குறித்து பரிந்துரையினை அரசிற்கு அளித்திட கீழ்க்காணும் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

1. ககன்தீப்சிங் பேடி, கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை.
2. டாக்டர்.கே.ஆர்.சண்முகம், முன்னாள் இயக்குநர், Madras School of Economics
3. பிரத்திக் தாயள், துணைச் செயலாளர் (வரவு செலவு), நிதித் துறை, உறுப்பினர் செயலர்.

இக்குழு தனது விரிவான அறிக்கை மற்றும் பரிந்துரையினை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

# கொடைக்கானலில் விடாமல் கொட்டும் பனியால் கடுங்குளிர்!

## சுற்றுலா தலங்கள் வெறிச்சோடின!

கொடைக்கானல், பிப்.7-

கொடைக்கானலில் நிலவும் கடுங்குளிரால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மலைகளின் இளவரசி என அழைக்கப்படுகிறது. பிரசித்தி பெற்ற இந்த சுற்றுலாத் தலத்திற்கு கோடை விழா மற்றும் தொடர், வார விடுமுறை நாட்களில் கூட்டம் களைகட்டும். தமிழகம் மட்டுமல்லாமல் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப்பயணிகளும் வருகை தருவர். நட்சத்திர ஏரி, கோக்கர்ஸ் வாக், மோயர் பாயிண்ட், தூண் பாறை, குணா குகை, பசுமை பள்ளத்தாக்கு, பேரிஜம் ஏரி ஆகிய பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் செல்வது வழக்கம்.

இங்கு நவம்பர், டிசம்பர் குளிர்காலத்தில் வெப்பநிலை மிகவும் குறைந்து காணப்படும். மேலும் உறைபனியும் பரவி கிடக்கும். இந்த காலங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறைந்து காணப்படும். எனினும் குளிர் சூழலை ரசிக்க விரும்புவோர் இங்கு வருவார்கள். பின்னர் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பனி மெல்ல மெல்ல குறைய துவங்கும். அப்போது சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கும். ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் துவங்கிய பின்னரும் தற்போது வரை கடும் குளிர் நிலவி வருகிறது. இந்த குளிர் சீசன் தொடர்வதால் கொடைக்கானலில் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

கோடை காலத்தில் இ-பாஸ் திட்டத்தை அறிமுகப்படுத்தியும் கூட்டம் சமாளிக்க முடியாமல் இருந்த நிலையில், குளிர் சீசனில் சுற்றுலாப்பயணிகள் வருகை வழக்கத்தை காட்டிலும் இந்த ஆண்டு குறைவாகவே உள்ளது. இதனால் அனைத்து சுற்றுலா இடங்களும் வெறிச்சோடி காணப்படுகின்றன. மேலும் தொடர் குளிர் சீசன் காரணமாக கொடைக்கானல் நகரில் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சுற்றுவட்டாரப் பகுதிகளில் விவசாய பணிகளும் முடங்கியுள்ளன.